ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2112/25 - 2019 පෙබරවාරි මස 28 වැනි බ්‍රහස්පතින්දා - 2019.02.28

*2112/25 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 28 ஆந் திகதி வியாழக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

### *2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, அந்நியச் செலாவணிச் சட்டம்*

*2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, அந்நியச் செலாவணிச் சட்டத்தின் 7 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 29 ஆம் பிரிவின் கீழான கட்டளை.*

தொடர்புடைய நிரல் அமைச்சுக்களினதும் தொடர்புடைய ஏனைய எந்தவொரு அதிகாரிகளினதும் அங்கீகாரத்திற்கு உட்பட்டு இலங்கை அரசாங்கத்திற்கும், இலங்கை அரசாங்கத்திற்கு சொந்தமான தொழில் முயற்சிகளுக்கும் (அரசுக்கு சொந்தமான 50% சதவீதத்திற்கும் கூடுதலான மூலதனப் பங்குகளைக் கொண்ட) பெற்றுக்கொள்ளப்படும் கடன் தொகையை, கடன் வழங்குநரின் உட்திரும்பல் முதலீட்டு கணக்கினூடாகப் பெற்றுக்கொள்ளாது, பெயர்குறிப்பிடப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் இலங்கைக்கு வெளியிலிருந்து கடனை பெற்றுக்கொள்வதற்கு இத்தால் அனுமதி அளிக்கப்படுகின்றது. அவ்வாறு கடனைப் பெற்றுக்கொள்வது பற்றிய விபரத்தை, இலங்கைக்கு கடனை வழங்கியதிலிருந்து ஒரு மாத காலத்திற்குள் நிதி அமைச்சின் வெளிநாட்டு வளங்கள் திணைக்களம், பொது தொழில்முயற்சித் திணைக்களம் மற்றும் வரவு செலவுத்திட்டத் திணைக்களம் (ஏற்புடைய விதத்தில்) ஆகியவற்றினால் அந்நியச் செலாவணித் திணைக்களத்தின் பணிப்பாளருக்கு அறிக்கையிடுதல் வேண்டும்.

*மங்கள சமரவீர,*
*நிதி அமைச்சர்.*

*நிதி அமைச்சு,*
*கொழும்பு 01,*
*2019, பெப்புருவரி 27.*

*03-697*